2045

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை – 2017

| தரம் - 6 | வரலாறு | நேரம் :- 2 மணித்தியாலம் |
| --- | --- | --- |

பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.

01. இலங்கை வரலாறு பற்றி அறிய உதவும் புராதன நூல்
    1) மகா வசம்சம் 2) தீபவம்சம் 3) சூளவம்சம் 4) பூஜாவலிய

02. ஒபபீனியா எனப்படும் கடல் வாழ் உயிரினம் கண்டு பிடிக்கப்பட்ட இடம்
    1) சீனா 2) இந்தியா 3) கனடா 4) இஸ்ரேல்

03. தாவரங்கள் முதலில் தரையில் தோன்றிய யுகம்
    1) பெரும்பனியுகம் 2) விவசாய யுகம் 3) கற்காலம் 4) பெலியொசொயிக்யுகம்

04. நெருப்பை முதன் முதலில் உபயோகித்த மனிதன்
    1) ஹோமோ இரெகடஸ் 2) ஹோமோ ஹெபிலஸ்
    3) ஹோமோ நியன்டதாலன்சிஸ் 4) ஹோமோசேபியன்

05. காலத்தால் முற்பட்ட இந்து நாட்காட்டி
    1) சாலிவாகன சகாப்த நாட்காட்டி 2) புத்த வருட நாட்காட்டி
    3) கலியுக வருஷ நாட்காட்டி 4) ஹிஜிரி ஆண்டு நாட்காட்டி

06. சிகுராத் ஆலயம் அமைந்துள்ள நாகரிகம் எது?
    1) சீன நாகரிகம் 2) மொசப்பத் தேமிய நாகரிகம்
    3) இந்திய நாகரிகம் 4) எகிப்திய நாகரிகம்

07. ஆபிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த ஹோமோசேபியன்களுக்கு வழங்கப்பட்ட பெயர்
    1) கொக்கசொயிட் 2) நிக்ரொயிட் 3) ஒஸ்ரிலொயிட் 4) மொங்கோலொயிட்

08. சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டிடம் அமைந்த நாகரிகத்தவர்
    1) சிந்துவெளி நாகரிகத்தவர் 2) சீனா நாகரிகத்தவர்
    3) மொசபத்தேமியா நாகரிகத்தவர் 4) எகிப்திய நாகரிகத்தவர்

09. கீசா எனப்படும் பிரமிட் காணப்படும் எகிப்தின் தலைநகரம்
    1) காட்டும் 2) டில்லி 3) அடிஅபாஸ் 4) கெய்ரோ

10. உலகின் மிகப்பழமையான எழுத்துக்கலை ஆரம்பமான நாகரிகம்
    1) மொசபத்தேமிய நாகரிகம் 2) இந்திய நாகரிகம் 3) எகிப்திய நாகரிகம் 4) சீன நாகரிகம்



kalvi.lk

2015

11. தங்க முகமூடி கொண்ட மம்மி முகத்திற்குரிய மன்னன்
1) சீனா தேபட்டிட்எடி 2) அகனெட்டான் 3) பார்வோன் 4) துட்டன்காமன்

12. இலங்கையில் சிப்பியைப் பயன்படுத்தி கழுத்தில் அணியும் அட்டியல் கண்டெடுக்கப்பட்ட இடம்
1) பாகியன் கல 2) கித்துல்கல 3) இரத்தினபுரி 4) சிறிவஸ்து புர

13. இலங்கையில் விஜயனும் குழுவினரும் வந்திறங்கிய துறைமுகம்
1) மாதோட்டம் 2) திருகோணமலை 3) தம்பபன்னி 4) ஜம்கோளப்பட்டினம்

14. அனுராதகம குடியேற்றம் அமைந்துள்ள நதி
1) மகாவலி கங்கை 2) கலா ஓயா 3) மல்வத்து ஓயா 4) களனி கங்கை

15. இலங்கையின் முதலாவது தலைநகரமாக அனுராதபுரத்தைத் தெரிவு செய்த மன்னன்
1) மகாசேனன் 2) பண்டுகாபயன் 3) தேவநம்பியதீசன் 4) விஜயன்

16. இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது குளமாகக் கருதப்படுவது
1) திஸ்ஸவாவி 2) நுவரவாவி 3) கலாவாவி 4) அபயவாவி

17. புத்தரின் வலது தாடை எலும்பை வைத்து அமைக்கப்பட்ட விகாரை
1) தூபராம விகாரை 2) இசுறுமுனிய விகாரை
3) ஜேத்தவனராமய விகாரை 4) அபயகிரி விகாரை

18. சத்திரியகுல மரபிற்கு அமைவாக விஜயன் திருமணம் செய்த தென்னிந்திய இளவரசியின் வம்சம்
1) சோழ வம்சம் 2) பாண்டிய வம்சம் 3) பல்லவ வம்சம் 4) கலிங்க வம்சம்

19. எகிப்தில் இறந்தவர்களின் உடலை நீண்ட காலம் பேணி பாதுகாத்து வைப்பதற்காகப் பின்பற்றப்பட்ட முறை
1) பிரமிட்டில் வைத்தல் 2) கல்லறை கட்டுதல்
3) களிமண் ஓடத்தில் வைத்தல் 4) மயானத்தில் எரித்தல்

20. உலகிற்கு மிகப்பழைய சட்ட நூலை வழங்கிய நாகரிகம்
1) மாயாநாகரிகம் 2) சீனநாகரிகம்
3) எகிப்திய நாகரிகம் 4) மொசப்பத்தேமிய நாகரிகம்

(20X2=40 புள்ளிகள்)



kalvi.lk

2045

## பகுதி II

01. முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாவிற்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு
02. விடை எழுதுக

A.

1) இரண்டாம் தவணையில் நீர் செய்த இரண்டு கணிப்பீடுக் கருவிகளின் பெயரைத் தருக.?

(2 புள்ளிகள்)

2) கணிப்பீட்டைச் செய்தமையால் ஏற்பட்ட நன்மைகள் மூன்றினைத் தருக? (3 புள்ளிகள்)

3) கணிப்பீடு செய்த பாட அலகுகளை எழுதி பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்களையும் எழுதுக?

(5 புள்ளிகள்)

(10 புள்ளிகள்)

B. மேல்வலும் வினாக்களுக்கு இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள இலக்கங்களை எழுதுக.

1) விஜயனும் எழுநூறு தோழர்களும் வந்து இறங்கிய
இடம் ..............................................................................

2) அனுராதபுரம் அமைந்துள்ள
நதி ..............................................................................

3) உருவெல என்ற விஜயனின் அமைச்சனால் உருவாக்கப்பட்ட
குடியேற்றம் ..............................................................................


4) புனித வெள்ளரசுமரக்கிளையைக் கொண்டு வந்த சங்கமித்தை இறங்கிய இலங்கைத்
துறைமுகம் ..............................................................................

5) தூபராம தூபி அமைந்துள்ள
மாவட்டம் ..............................................................................

(2X5=10புள்ளிகள்)



kalvi.lk






kalvi.lk

02.

1) இலங்கை வரலாறு பற்றி அறிய உதவும் வரலாற்று மூலதாரங்களை வகைப்படுத்துக? (2 புள்ளிகள்)

2) இலங்கை வரலாறு பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றுகளுக்கு நான்கு உதாரணம் தருக? (4 புள்ளிகள்)

3) வரலாற்றுக் காலத்தை அளவிட நான்கு மதத்தவரும் பயன்படுத்திய முறைகளை எழுதுக? (4 புள்ளிகள்)

03.

1) "நிகாரிகா" என்பதன் பொருள் யாது? (2 புள்ளிகள்)

2) மனிதன் விலங்கிலிருந்து வேறுபடும் முறையைத் தருக. (4 புள்ளிகள்)

3) மானிட பரிணாமம் என்றால் என்ன?
மனிதனின் கூர்ப்புக் கட்டங்களைத் தருக? (4 புள்ளிகள்)

04.

1) பின்வரும் நதிக் கரைகளில் உருவாகிய நாகரிகங்களைத் தருக. (2 புள்ளிகள்)
1) சிந்துநதி 2) நைல்நதி 3) குங்கோநதி 4) யூப்பிரட்டீஸ் தைக்கிரீஸ்

2) மொசப்பதேமிய நாகரிகத்தில் காணப்பட்ட நான்கு பிரிவினர்களும் யாவர்? (4 புள்ளிகள்)

3) மொசப்பதேமிய மக்களது சமய வழிபாடு பற்றி எழுதுக? (4 புள்ளிகள்)

05.

1) சிந்துவெளி நாகரிகம் தற்போது காணப்படும் நாடு எது? (2 புள்ளிகள்)

2) சிந்துவெளி மக்களது நகர வாழ்க்கை முறையில் காணப்பட்ட அம்சங்களைத் தருக? (4 புள்ளிகள்)

3) எகிப்திய நாகரிகத்தவர்கள் உலகிற்கு அளித்த கொடை யாது?

4) எகிப்திய மக்கள் இறந்தவர்களின் சடலத்தைப் பாதுகாத்த முறையைத் தருக. (4 புள்ளிகள்)

06.

1) இலங்கையில் வாழ்ந்த ஆரம்பக் குடிகளான வேடுவரது உணவுகள் மூன்றினைத் தருக? (2 புள்ளிகள்)

2) விஜயனுடன் வருகை தந்த குழுவினர் அமைத்த குடியேற்றங்கள் இரண்டினையும் ஆறுகள் இரண்டினையும் தருக? (4 புள்ளிகள்)

3) ஆரம்பக் குடியினரான வேடுவர்கள் வாழ்ந்த இரு குகைகளையும் அவர்களது மரணச் சடங்கு முறையினையும் எழுதுக? (4 புள்ளிகள்)

07.

1) பண்டுகாபய மன்னன் கட்டிய இரு குளங்களைத் தருக? (2 புள்ளிகள்)

2) பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தை நகரமாக மாற்றி அமைத்த முறையை எழுதுக? (4 புள்ளிகள்)

3) தேவசம்பியதீஸன் பௌத்த சமயத்திற்கு ஆற்றிய பணிகள் நான்கு தருக? (4 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන
kalvi.lk

# GRADE 6,7,8

STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page